அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

— 1 —

மலர் 1 | 1949ஆம் ஏப்ரல்மீ விரோதிஆம்—சித்திரைமீ | இதழ் 1

MAHAMAHOPADHYAYA ... LIBRARY
DR. U. V... BESANT ... MADRAS-90
18579

கண்ணனும் கந்தனும்

"நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தை மகிழ்— மருகோனே.

அமிர்தவசனி,
அ. முத்துஸ்வாமி
ஆசிரியர்.

வாழ்த்து

(திருமுருக கிருபானந்த வாரி)

நேரிசை வெண்பா

புகழ்முத்து சாமிப் புனிதவேள் தந்த
இகபரமார் மாதவெளி வீடு—குகனருளால்
வாழி அமிர்த வசனி வளமுடனே
வாழிநீ ஊழி மகிழ்ந்து.

பொருளடக்கம்

1.	ஆசிமொழி	திருப்புகழ்மணி ...	1
2.	புது வருஷமும் தமிழர் பண்பும்	திருப்புகழ்மணி ...	2
3.	தமிழ் அமுதம்	ரா. பி. சேதுப் பிள்ளை ...	5
4.	சேரவாரும் செகத்திரே	D. ராமஸ்வாமி ...	6
5.	இறை உறவு	இளவழகனார் ...	8
6.	அமிர்தம்	கிருபானந்தவாரி ...	14
7.	பழம் பழனி	கி. வ. ஜகந்நாதன் ...	16
8.	பெருர் திருடன்	இராமலிங்கம் பிள்ளை ...	18
9.	இல்லாத பரம்பொருள்	ஸ்ரீநிவாசராகவன் ...	22
10.	பக்தியும் இசையும்	மீனாக்ஷி சுந்தரம் ...	25
11.	மழையே பொழிவாய்	பரமசிவானந்தம் ...	28
12.	பாட்டு	துரை அரங்கசாமி ...	30
13.	வைஷ்ணவர் செல்வம்	வேங்கடராம சாஸ்திரி ...	31

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

125

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

" எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறென் றறியேன்பராபரமே "

மலர் 1 } 1949 ஏப்ரல் விரோதிவருஷ சித்திரை { இதழ் 1

ஆசிமொழி

★

தாயே! அமிர்தவசனி! வெகுநாளாய் எங்கள் காட்சியினின்றும் மறைந்திருந்த முகாந்திரம்தான் என்னே! இவ்வருஷத்தில் ஆரம்பதினமே வெளிப்பட்டாய். எங்கள் பாக்யம். விரோதியாய் வருஷம் பிறந்ததென்றே துணையாய் எமக்கு நீயும் தோன்றினாய். விஷம் வருஷத்தில் இருந்தால் என்னபயம். அம்ருதம் கொடுக்கும் தாய் உடன் இருந்துவிட்டால் மக்களுக்குக் கவலையேன்? அடியார்கள் ஞாயிறு திருக்கூட்டத்தை. வாழ்த்துவாய். ஆசி அளிப்பாய். உலகெலாம் ஒன்றென்ற அன்பர் உணர்ச்சியை வளர்த்து, பேதத்தைக் கடிந்து, மன ஒற்றுமையில், சேவையில், ஆனந்தத்தில் எங்களை நிறுவவேண்டும். எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக!

திருப்புகழ்மணி.

தமிழ் வருஷமும் தமிழர் பண்பும்

(திருப்புகழ்மணி)

தமிழ் வருஷம் பிறந்தது. நீர்குன்றி உணவு குன்றி, மக்கள் உள்ளத்தில் ஆர்வம் குன்றி, அன்பு குன்றி ஒற்றுமை குன்றி, வேற்றுமை மலிந்து, சண்டை சச்சரவுகள் மலிந்து, க்ரோதம் திகழ்ந்து கக்ஷிகள் நடமாடும் தற்காலச் சூழ்நிலையில் வருஷமும் விரோதியாய் அவதரித்தது. தமிழ்நாட்டின் மக்களுக்கன்றி இந்தியாவுக்கே இது ஒருபெரிய பரிசோதனை. இச்சமயத்தில் தான் தமிழின் பண்பு பூரணமாய்ப் பரிமளித்தல்வேண்டும். 60 வருஷங்களுக்கு ஒருதரமாக வந்துகொண்டே இருக்கின்றது இந்த விரோதி வருஷம். தமிழெனும் பண்பில் பயிற்சிபெற்ற நம்நாட்டு அறிஞர்கள், அன்பாலும், ஜீவகாருண்யத்தாலும், பக்தியாலும் இவ்விதகால கஷ்டங்களைச் செவ்வனே வெற்றியுடன் கடந்து வந்திருக்கிறார்கள். வெற்றியுடன் விரோதியெலாம் கடந்துவந்த மேலோர்கள் கொண்டவழிதான் என்னே! தொன்றுதொட்டுவந்த தமிழ்ப்பண்பே. அதில் முக்கிய சில குறிப்புகளை கவனித்தல்வேண்டும்.

முதன்மையாகத் திருக்குறளில் உபதேசிப்பது.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

எல்லாவிதமான கஷ்டங்களும் ஒருங்கு சேர்ந்து துன்புறுத்தத் தலைப்பட்டால், சிறு அசௌகரியங்கள்கூடப் பெரும் கோபத்தையும் தாபத்தையும் கிளப்பிவிடுகின்றன. கஷ்டங்களைப் பார்த்து "ஐயோ பாவம்! என்று அன்பான ஒருமொழிகூட பகராத மக்கள் சூழ்ந்திருக்கப்பெற்றால், கஷ்டப்படும் மக்களுக்கு இதயம் எப்படித்தான் இருக்கும். துக்கமும், வியாதியும் ஜாதிக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கினவல்லவே ஆயினும், இறைவனைப் புகழ்ந்து கஷ்டங்களைத் தீர்க்கவேண்டுவதே ஒரு சாந்தி. இறைவனைப் புகழ்ந்தால்,

1. உயர்கருணை புரியுமின்பக் கடல் மூழ்கி

கஷ்டங்களை நிவர்த்தி செய்வான். நாம் இது விஷயமாய் நாடும் முயற்சிகளை வெற்றிகரமாய் முடித்துவைப்பான். மனமுடைந்து, செய்யும் செயல் தெரியாது, தவிக்கின்ற நம் மக்களுக்கு முதல் சகாயமாகச் செய்யவேண்டியது—அவர்களை நாடுவது; அநுதாபிப்பது; அன்பு எனும் குழம்பால் அவர்கள் மனப்புண்களைத் தடவி ஆற்ற முயற்சிப்பது; இறைவன் புகழைப்பாடுவது; அவர்தமைப்பாட வைப்பது. 'இறைவன் பலத்தை நம்முடன் சேர்த்துக் கொண்டால் அது நம்மை வெற்றியில் சேர்த்துவிடும். அதனாலல்லவோ பாண்டவர்கள் கண்ணனை விரும்பினார்கள். இந்தத் தத்துவம் அறியாத துரியோதனர் கண்ணன் சைன்யத்தை விரும்பினர். பெருமக்களாய் இருப்பினும், சிறு மக்களாய் இருப்பினும், எம்மக்களையும் ஒரு மக்களாய் அன்பாய்க் கருதும் திருக்கூட்டத்தில் சேர்மின். இறைவன் புகழொடு நீரும் புகழ்பெறுமின். வரும் கஷ்டங்களை வெற்றியுடன் தாண்டும் திறன் அருளும் இறைவன்பால் சேர்மின்.

"ஜாதிகுலங்களைப் பாராதே—வேதனைப்படும் போதவற்கு" என்று தமிழ்ப்பண்பை **வேதநாயகம் பிள்ளை** பெண்களுக்கு உபதேசித்தார். "இங்கு உற்றபடி அங்குமெனஅறியும் நல்லறிஞர்—எக்காலமும் உதவுவார்", என்றார் **தாயுமானர்**. பெரியோர்கள் பண்பு இதுதான். தமிழ்ப் பண்பும் இதுதான். இதயத்தில் அன்பு; சொல்லில் இனிமை; இன்சொல் இல்லையேல் சொல்லின்மை பெரிது. காரியத்தில் சேவை. இவையெலாம் பரிமளிக்கச்செயும் இறைவன் திருப்புகழ். இவை தமிழ்ப் பண்பின் ஆதாரமானல் பதினன்கு உலகையும் வெற்றிகொள்ளலாகும். மக்கள் மனம் பேதப்படாமல் ஒற்றுமையாய்த் தமிழ்ப் பண்பில் நின்றுவிட்டால், இதுதான் உயர்ந்த ஆசாரம். தர்மசாஸ்திரங்களும் அநுஷ்டானங்களும் சித்த சுத்திக்கன்றோ ஏற்பட்டன. சுத்தமான அபேதஅன்பும், இன்பமான சொல்லும், சூழ்நிலைக்குகந்த உதவியும் நம்மிடம் ஸ்திரமாய் நின்றுவிட்டால் சுத்தியாய் நிற்கும் மனதைக்

உனையெனது ளறிய மன்பைத் தருவாயே **(திருப்புகழ்)**

கஷ்டங்கள் தான் என்செயும். ஒற்றுமையினால், உதவியின் பண்பினால், இன்சொலால், அபேத அன்பினால் விரோதி யாம் வருஷமே! உன்னை வெற்றிகரமாய்க் கடந்திடுவோம் பார்! நீ மறைவாய்; நாங்கள் மாண்புற வாழ்வோம் என்று மார்தட்டிக் கூறுவதன்றோ தமிழ்ப் பண்பு! முருகனிருக் கையிலே வேலுண்டு, பயமில்லை; மயிலுண்டு வினையில்லை. விரோதிகளையெல்லாம் அன்பராய் மாற்றும் ஆண்டவன் வேலிருக்க, சிந்தனையில்லை. வேற்றுமையால் க்ரோதத்தால் இரும்பெடுத்து வதைக்க வரினும் கரும்பெடுத்த **பட்டினத் தடிகள்** அடியார்கள் இரும்பெடுக்க மனங்கொள்ளார். கரும்பெடுத்தே வெற்றிகொள்வார். செந்தமிழ் மணநாறும் நாவுடைய திருமக்கள், செஞ்சொல்லெடுத்தே வெற்றி கொள்வார், இருங்கல்லெடுக்க மனங்கொள்ளார். அன்பால் வெற்றிகொள்ளும் தமிழ்ப்பண்புக்கு மூவுலகும் (மண், நீர், ஆகாயம்) திரண்டுவரினும் பயமுண்டோ? "தானே தனக்குப் பகைவனும் நட்டானும்" எனக் கற்பித்த தொல் மொழி மறந்தோம் அல்லோம். உள்ளத்து விரோதிகள் மடிந்தார்கள். புறத்துள்ள விரோதிகள் மறைந்தார்கள். உலகை அன்பால் அளப்போம். மன்மக்களை அவிரோதி களாக நாட்டிடுவோம். சேவையே அரசியலாய் நிறுவு வோம். ஸ்வராஜ்யமே நம் ஸ்வராஜ்யமாய் நிலைநிறுத்து வோம்.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனும் நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணை அவன் பன்னிருந்தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணைவடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

---

2. அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலும்

தமிழ் அமுதம்

(ரா. பி. சேதுப்பிள்ளை)

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடினார் பாரதியார். இனிமை என்பது தமிழின் பண்பு, தமிழ்ப் பாட்டிலும் உரையிலும் அப்பண்பினைக் காணலாம். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைத் தேவாமிர்தத்தினும் சிறந்ததாகக் கண்டார் ஒரு தமிழ்க் கவிஞர்.

"வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின், வாய் மடுக்கும் தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்'' என்று வியந்து மகிழ்ந்தார். இத்தகைய பண்பு வாய்ந்திருத்தலாலேயே திருக்குறளின் ஆசிரியரைத் "தெய்வப் புலமைத் திருவள்ளுவர்'' என்று தொன்று தொட்டு இன்றுவரை கொண்டாடி வருகின்றது தமிழுலகம்.

தெய்வ நலம் திகழ்கின்ற திருப்பாடல்கள் பல்லாயிரக் கணக்காகத் தமிழ்மொழியிலே உண்டு. அவற்றைத் 'தேமதுரத் தமிழ்' என்றார் பாரதியார். திருவாசகம் என்னும் தெய்வப் பாடலின் சுவையைத் துய்த்த கவிஞர் ஒருவர்,

"வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

என்று உருக்கமாகப் போற்றினார். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை முறையாகக் கற்ற மகாவித்வான் ஒருவர் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ'! என்று அந்நூலின் ஆசிரியரை வாயார வாழ்த்தினார்.

காவிய உலகத்திலே சிலப்பதிகாரம், செந்தமிழ் அமுதம்: கம்பன் கவிதை, தேன் பிலிற்றும் சோலை. இவ் இரு பெருங் காவியங்களிலும் அமைந்த தமிழ்ச்சுவை கற்போர் நெஞ்சை அள்ளுவதாகும். இத்தகைய கவிதையில் ஊறும் அமிழ்தம் என்னும் தமிழ் மொழியை உய்விக்கும்: தமிழ் மக்களை வாழ்விக்கும். இதனை அறிந்தன்றோ

"தமிழன் என்றொரு இனமுண்டு ; தனியே
அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்; அன்பே
அவனுடை நெறியாகும்'!

என்று பாடினார் ஆஸ்தானக் கவிஞர்!

அடியேனை அஞ்சலேன வாவேணும் (திருப்புகழ்)

சேரவாரும் செகத்தீரே!

[D. ராமஸ்வாமி அய்யங்கார்]

"சேரவாரும் செகத்தீரே"—இது பல நூற்றுண்டுகளுக்குமுன் தாயுமான ஸ்வாமிகள் போட்ட கூப்பாடு. அன்றைக்குப் பன்மடங்கு அதிகமாக இன்றைக்கு இப்படிக் கூவியழைத்து ஒன்றுகூட்டுவோர் தொண்டு, உலகத்தில் மிகமிக அவசியமாயிருக்கிறது. பல்வேறு காரணங்களால் ஒற்றுமை மிகக்குறைந்திருக்கிறது இந்நாளில்—என், மறைந்தே போய்விட்டதென்று கூடச்சொல்லலாம். வகுப்புவாதங்களும், மதவிஷயங்களில்கூட ஓயாத சச்சரவுகளுமே எங்கும் மலிந்துகிடக்கின்றன. பிரித்து பாகித்து, வகுத்துப் பேசுவோர் பேச்சே நாடெங்கும் நிறைந்து கிடக்கிறது. அனைவரும் ஒன்றுபட்டு ஒரு குடியாக வாழவேண்டுமென்று மனோரதித்து அதற்காகப் பெரும் பாடுபட்டுவந்த காந்தியடிகளுக்கு இந்தியாவிலே இடமில்லை. ஆத்மசக்தி எங்களுக்கேயுள்ள தனிப் பெருமையென்று சொல்லிக்கொள்ளும் நம்மிந்தியர்கள் மனோநிலையே இத்தகையதென்றால் பிறநாடுகளைப்பற்றிக் கூறவேண்டுமா?

இப்படி விரோத வெறிபிடித்து அல்லலுறும் உலகத்தைத் தடுத்தாட்கொள்ள ஸர்வேச்வரனுக்கும் அவன் மெய்யடியார்களுக்கும் மனமில்லையாவென்று நல்லுணர்வுடையோர் வருந்துகிறார்கள். சுயநலமன்றிப் பிறிதொரு நலமுமறியாத பேதைகளைப் பரிதபிக்க விடுவது முறையல்லவென்று எத்தனையோ பெரியோர்கள் மனம் வருந்தி தெய்வத்திடத்து முறையிடுகிறார்கள். "உன்னையே நீ எண்ணிப்பாரு" என்று நல்லுபதேசம் செய்து எவ்வளவு துவேஷமும் வெறுப்பும் மேலிட்டு வாதாடுவோரையும் திருத்திப் பணிகொள்ள வழிதேடுவது மிக அவசியம் என்ற எண்ணத்தோடு உலக சேவைசெய்ய முற்படுவோரே ஆண்டவனிடத்தும் அவன் மக்களான உலகோர்களிடத்தும் மெய்யன்பு பூண்டவர்களாவார். அப்படிப்பட்ட நல்லன்பர்கள் அமிர்த வசனங்களையெல்லாம் திரட்டிப் பிரசுரிப்பதே முக்கிய நோக்கமாகக்கொண்டு இந்த "அமிர்த வசனி" யென்னும் பத்திரிகை ஆரம்பிக்கப்படுகிறது என்று கேட்டபோது அடியனேன் எய்திய மகிழ்ச்சிக்கு அளவு கிடையாது.

---

3. அறிவாகமும் பேருக இடரான துர்தோலைய

வாடி ஆட்பட்டு நின்றீர் உள்ளீரேல், வந்து மண்ணும் மணமும் கொண்மின்; தொண்டீர் எல்லீரும் வாரீர், தொழுது தொழுது நின்றார்த்தும்; சேரவாரும் செகத்தீரே—என்றெல்லாம் பிறரைக் கூவியழைத்து ஒன்று சேர்ப்பது ஒரு உயர்பணி. அப்படிச் சேர்ந்தோரை அன்பு எனும் பாசத்தால் பிணித்துவைக்கவேண்டும். வேறெப்பாசத்திற்கும் (கயிறுக்கும்) இத்தகைய வலிமைகிடையாது. நம்மிடை அன்புதோன்றினால் ஆண்டவனிடத்து அருள்தோன்றும். அதைத்தான் "ஒன்றாகிப் பலவாகி உயிர்க்குயிராகி ஆடும் கருணை பரஞ்சோதி அருளைப்பெறுதற்கு அன்புநிலை தேடும் பருவமிது காண்பீர் சேரவாருஞ் செகத்தீரே" என்று பாடுகிறார் தாயுமானவர். இந்தப் பாசுரத்தால் மதப்பிரசாரம் செய்வோர்கள் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றெல்லாம் வகுத்துப்பேசுவதை மனதில்கொண்டு பாடுகிறார் என்பது விளங்குகிறது. ஒன்றாகி—அத்வைதப்ரம்மமாகி, பலவாகி—த்வைதஸித்தாந்தப்படி பல பலவாகி வேறுபட்ட பொருள்களாகி, உயிர்க்குயிராகி-விசிஷ்டாத்வைதஸித்தாந்தப்படி சேதனாசேதனங்களையெல்லாம் தனக்கு உடலாகக் கொண்டு, அவ்வுடல்மிசை உயிரெனக்கலந்து எங்கும் பரந்துவிளங்கும் தெய்வுமாகி நிற்பது ஒரே மூர்த்திதான். அது தில்லைத் திருவெளியில் ஆனந்தத் தாண்டவம் புரிகிறது. அதுவே கருணை வடிவு. அதன் அருளைப்பெற அதனிடத்து அன்புபூண்டு நிற்றலன்றி நாம் செய்யவேண்டுவது வேறெதுவுமிலது. அவ் வன்புநிலையைத் தேடி அவ்வருளைப் பெற நமக்கெல்லாம் ஒரு நல்வினையுள்ளது. ஆகவே வருக, வருக, அனைவரும் வருக, என்று கூவியழைக்கிறார் உலகனைத் துகளும் தாய்போன்ற இப்பெரியார்.

அடுத்த பாடலில் காக்கைகளுக்கிருக்கும் நல்லறிவேனும் மனிதர்களாகிய நமக்கிருக்கவேண்டாமா என்று எடுத்துக் காட்டுகிறார், "காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றாரம்பித்து, அற்பமான எச்சிலுணவு சிறிது வீதியில் எறியப்பட்டால் அதை உண்ண காகம் தன்னினத்தாரைக் கூவியழைத்து வருகிறதே; அப்படியிருக்க, கொள்ளமாளா இன்பவெள்ளமாயுள்ள அகண்டாகார சிவபோகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கிடக்கின்றதே, அதை இன்பமாய் அனைவருடன் கூடியிருந்து உண்டு பருகிக் களிக்கச் சேரவாரும் செகத்தீரே, என்று மீண்டுமொருமுறை கூவுகிறார்.

அருள் ஞான இன்பமது புரிவாயே (திருப்புகழ்)

அதேமாதிரி விசால ஹ்ருதயம் பெற்றபேர்கள் நம் பூர்வர்களில் எண்ணிறந்தபேர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகை நீத்தபோதிலும் அழியா அருள்மொழிகளைத் தந்துபோயிருக்கிறார்கள். அவைகளைக் கற்றுணர்ந்து நம்மையும் திருத்திக்கொண்டு பிறரையும் நல்வழிப்படுத்த முயலவேண்டுவது நம்மனைவரது கடமை. இதை நாம் மறவாதொழுகினால் உலகம் சீக்கிரம் ஒழுங்குபடும். கலியும் கெடும்; கண்டு கொண்மின்.

இன்று உதிக்கும் வருஷத்திற்கு விரோதியென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வருஷமும் உண்மையில் விரோதியல்ல. பகவான் கீதையில் அருளியதுபோல் நமக்கு உண்மையான விரோதி நாமே. நம்முள்ளத்தில் பிறர் விஷயமாக ஏற்படும் விரோதபாவத்தைக் களைத்தெறிந்து, நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்ற உணர்வால் அனைவரும் நம்முற்றாருறவினர் என்றுகொண்டு நாமும் நல்வாழ்வு வாழ்ந்து, பிறரையும் பெருவாழ்வு வாழச்செய்ய நாம் ஒவ்வொரு கணமும் முயன்றால் ஸர்வேச்வரன் அனைவருக்கும் இன்னருள் பரிவான். ஆகையால் இம்மாபெருந்தொண்டில் 'சேரவாரும் செகத்தீரே!'

இறை உறவு

[இளவழகனார்]

சான்றோர் :

பண்டைக்காலத்தில், சான்றோர்களைப் போற்றி நாட்டுக்கு உணர்வு நலம் பெருக்கும் திருப்பணி நன்கு நடைபெற்று வந்தது. முடிமன்னரும் குறுநில மன்னரும் இக்கடமையைக் கண்ணெனக் காத்து வந்தனர். குடிமக்களும் இந் நலத்துக்கு ஆக்கமாய்த் திகழ்ந்தனர்.

கபிலர், கோவூர் கிழார், ஔவையார், பிசிராந்தையார், பெருஞ் சித்திரனார், மாங்குடி மருதனார், வெள்ளைக்குடி நாகனார், மோசி கீரனார் முதலிய எண்ணிறந்த சான்றோர்களை அக் காலத்தவர் சிறப்பாகப் போற்றிக் காத்துப்

பயன்கொண்ட செய்திகள் புறநானூறு முதலிய பழந் தமிழ் நூல்களில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. 'கபிலர்' என்னும் அந்தணர்க்குத் தமிழகமெங்கும் சிறப்பு மிகுந்திருந்தது; ஊர்களும் பொருள்களும் அவர்க்கு ஏராளமாக வழங்கித் தமிழகம் புகழ்பெற்றது. 'பாரி' என்னும் பெருவள்ளல் அவர்க்கு மிகவும் இணக்கமாயிருந்து விளங்கினன். துறவோராகிய தெய்வநலமிக்க 'ஒளவையா' ரை 'அதியமா'னும் பிறரும் மிக்க நம்பிக்கையோடும் மதிப் போடும் அன்போடும் போற்றிக் காத்துவந்தனர். 'கோவூர் கிழார்' என்னும் அறவோரைச் சோழ பரம்பரையினர் தக்கவாறு போற்றி நலமுற்றுப் புகழோங்கினர். இங்ஙனம் சங்கநூல்களில் நெடுக இதுபற்றிக் குறிப்புகள் உண்டு.

பிற்காலத்திலும் 'பராந்தக சோழன்' 'பராக்கிரம பாண்டியன்' போன்ருர் இவ்வாறே சான்ருேர் இருக்கைகள் நிறுவி அங்கங்கும் நல்லுணர்வும் வளமும் பெருக்கி வந்தனர்..

அரசருள்ளும், 'கரிகால் வளவன்', 'பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்', 'சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப் பெருஞ்சேரல் இரும்பொறை' முதலிய எத்தனையோ பேர் சான்ருேராய் உயர்ந்து திகழ்ந்தனர்.

ஆகவே, முற்காலத் தமிழரசு, தக்க அடிப்படையுண்மை கண்டு அதன்வழி ஒழுகி நாட்டுக்கு மெய்வளம் பெருக்குவதாயிற்றென்பது இனிது விளங்கும். அரசினர்க்குரிய இப் பொறுப்பை,

"நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே!
நினவ கூறுவல், எனவ கேண்மதி;
அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதில் பதன்எளி யோர்ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே;

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகல் ஞாலம்"

என்று பண்டைத் தமிழ்ச் செய்யுள் ஒன்று இனிதுணர்த்து கின்றது.

மழைவளம் அறவுணர்வால் உண்டாவதென்பதும், அறவுணர்வு அறவோர் முதலிய சான்றோரால் எங்கும் பெருக்கப்படுவதென்பதும், எனவே அரசாட்சியாவது நாடு முழுதும் சான்றோரைப் போற்றி அதனால் அறநெறி பரப்பிச் செயல் புரியும் முதன்மையுடையதென்பதும், இந்நிலையிலே தான் குடிமக்கள் பொருள்வளமும் அருட்செழிப்பும் ஒருங்குடையராய்த் தாமும் அறம் இயற்றி வாழ்வு ஓங்குவ ரென்பதும் இதுகாறுங் கூறியதுகொண்டும் தெளியப்படும்.

அறநெறி :

சான்றோரும் அரசரும் குடிமக்களும் இக் கருத்தில் இவ்வாறு ஒத்த நோக்கமும் இணக்கமும் இயக்கமும் உடையவராய் அறம் பெருக்கி வருதலைவிட, நிலையான நாட்டு வளர்ச்சியும் எதிர்கால ஆக்கப் பணியும் வேறில்லை. அனைவர் உடல் பொருள் ஆவி முழுதும் இவ் வறம்பெருக் கும் நிகழ்ச்சிக்கே ஒத்துச் செல்வாதல் வேண்டும்.

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ ?"

என்றார் சிறந்த அருட்பெருஞ் சிறப்பினரான **பட்டினத் தடிகள்.**

ஒழிந்தன காலங்கள், ஊழியும் போயின;
கழிந்தன கற்பனை நாளும் குறுகி;
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் **அறம்**அறி யாரே !

நாட்டு வளத்துக்கும், நன்மக்கள் அறநெறிக்கும், நாட்டின் செங்கோல் ஆட்சிக்கும் தம் உணர்வும் ஒழுக்க

5. **செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞானமு**

மும் காரணமாயிருத்தல் கண்டு, சான்றோரும், இயன்ற வரை தம் கடமைகளில் வழுவாமல் விழிப்பாய் விளங்குவர். தமிழ்நாட்டிற் பண்டு விளங்கிய சங்ககாலச் சான்றோர், இக் கடமையில் கண்ணுங் கருத்துமாய் இருந்து நடந்து கொண்டனர். அவரால் தமிழ்நாடு முழுதும் அக் காலத்தில் அறநெறியிற் சிறந்து ஓங்கியது. குடிமக்களும் அரசரும் நெறி தவறுங் காலங்களில், அச் சான்றோர், அஞ்சாது அறிவுரைத்து எங்கும் அறநெறி பரப்பி வந்த அருமை ஒரு போதும் மறப்பரிது.

சான்றோரில்லாத ஊரை ஊரென்றே எண்ணார் அக் காலத்தவர்; 'சான்றோர் இருக்கும் ஊரே பாதுகாப்பானது, நடுக்கமில்லாதது, ஒடுங்காதது' என்றெல்லாம் அவர் கருதி மகிழ்ந்தனர்.

"பொதியி லாயினும், இமய மாயினும்,....புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்"

என்னும் **இளங்கோவடிகள்** திருமொழியே இதற்குப் போதிய சான்றாம்.

இறை :

இனி, இவ்வாறு அனைவர் நலத்துக்கும் காரணமா யுள்ள சான்றோர், தாம் சான்றோரானமை எப்படி என்பதும் அறிதல் வேண்டும்.

தம்மினும் பெரியாரது துணைகொண்டுதான் எவரும் மேன்மையுறுதல் கூடும். ஆகவே, சான்றோர், தாம் சான்றாண்மையுணர்வு பெறுதற்கும் அம் முறையையே கடைப் பிடித்தல் வேண்டும்; வேறு வழியில்லை.

பெரியோர் பெரியோர் என்று ஒருவரையொருவர் தாவித் துணை பெறுதலே இவ்வுலகத்தின் இயல்பு. இங்ஙனந் தாவித் தாவிச் செல்வோர்க்கு இயற்கையில் ஒரு முடிவிருத்தல் வேண்டுமன்றோ ? அம் முடிவிடமே, தனக்கு

செங்கனி வாயில் ஓர்சோல் அருள்வாயே (திருப்புகழ்)

மேற் பெரியதொன் றில்லாத, தானே ஏனையெல்லார்க்கும் உணர்வு பயக்கும் பெரிய பொருளாகத் திகழ்கின்ற, 'கடவுள்' அல்லது 'இறை' என்பது.

அப் பெரும்பொருள், இயல்பாகவே உண்மை, அறிவு, இன்ப வடிவானது. அதன் துணைகொண்டே சான்றோர் தமது சான்றாண்மையுணர்வை முடிவாகப் பெருக்கிக் கொள்வர். பெருக்கி, ஏனை யெல்லார்க்கும் நாடு செழிக்க உதவுவர்.

நாட்டு முன்னேற்றத்துக்கு இந்நெறியை யல்லது வேறு வாயிலே இல்லையென்பது தக்கோர் முடிவு. அல்லும் பகலும் உலகுக்கு இங்ஙனம் தோன்றாத் துணையாயிருந்து ஆக்கந் தேட உதவும் முதல்வனை இல்லையென்று வாதித்து நிலைகெடுவது நல்லதாகாது.

> வல்லவன், வன்னிக்கு இறை, இடை வாரணம்
> நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை,
> இல்லென வேண்டா; இறையவர் தம் முதல்;
> அல்லும் பகலும் அருளுகின் றானே.

தெய்வத்தை மறந்த செயல் எதுவும் சான்றாண்மை யுணர்வுடன் நடைபெறாது; ஆக்கப் பணியாய் நிகழாது; நன்மையிற் சென்று முடியாது. ஆகவே, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் என்னும் ஒரு பெரும்பொருளின் உதவியினாலல்லாமல், யாரும் சான்றோராய் உயர்தலும் இயலாது.

> அவனை யொழிய அமரரும் இல்லை;
> அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை.

காரணம், அப் பெருமான் அத்தகைய தனிப்பெருந் தலைவன்.

> "தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத் தலைமகன்"
> "முயலும், முயலில் முடிவும், மற்று ஆங்கே
> பெயலும், மழைமுகில் பேர்நந்தி தானே."
> "கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே."

---

6. பத்தியை எனக்கருளி முத்தியை அளித்துவளர்

இறை உறவு :

ஆதலால், 'ஈசன் உறவுக்கு எதிரில்லை.' அவனைத் தவிர மற்ற யாரும் பிறவித் துயரை நீக்குதல் இயலாது. அவன் ஒருவனே கூற்றுவனைக் கடியும் ஆற்றல் படைத்தவன். எதனாலும் தாக்குதல் இல்லாமல் உலகம் கடந்தவன். பிறர்க் கென்றே வாழும் தவஞான நிலையில் என்றும் நிற்பவன். அல்லும் பகலும் அருளும் அருளாளன். "அவனோடொப் பார் இங்கு யாவரும் இல்லை"

மக்கள் இத்தகைய முழுமுதற் செம்பொருளையே மனமார நினைத்து வாயார வாழ்த்தி உடலாரத் தொழுது உறவுகொள்ளல் வேண்டும். இதனால், அப் பெருமானுக் குள்ள பெரும்பண்புகள் வணங்குவார் உள்ளத்திலும் நிறைந்து வரும்.

அந்தமில் ஈசன் அருள்நமக் கேஎன்று
நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே

இவ்வாறுதான், மக்கள், முதல்வன் பண்புகள் நிறைந்து சான்றோராய் உயர்கின்றனர்; அவர் பலராகின்றனர். நன் மக்கள் அறவோராகவும், அறவோர் அந்தணராகவும், அந்த ணர் துறவோராகவும் மேம்படுகின்றனர்.

இறையோடு உறவு, இயன்ற அளவில் மேற் கொள்ளலாம்; அது மேலுமேலும் பேர் உறவுக்கு வழி செய்யும்.

எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினால்,
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே.

ஆனால், உள்ளத்தில் கரவு மட்டும் இல்லாமல் மெய்யனொ டுடன் உறவுகொள்ளல் வேண்டும். புறம் மறந்த அக உயர்வும் உணர்வும் இதனாலேதான் கிடைக்கும். உளமார நாம் எதனைப் பொருள் செய்கின்றோமோ, அதுதானே நம்மிடத்தில் மிகுந்து நிற்கும்.

பச்சைமயில் உற்று வாவேணும் (திருப்புகழ்)

மறைந்து அடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்கும்
புறம் சடம் செய்வான் புகுந்து நின்றானே.

இறையோடு உறவுக்குக் கரவின்மையோடு வேற்றுமை யின்மையும் முதன்மையாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

முழுமுதற் கடவுள் ஒன்றே உலகத்துக்கு உள்ளது; இரண்டாவது இல்லை. ஆதலால், அந்த ஒரு பொருளின் வல்லமையே மற்றத் தேவர்களிடத்திலும் சான்றோர்களிடத்திலும் இயற்கைப் பொருள்களிலும் கலந்து, தனது தெய்வ மணத்தை எங்கும் பரப்பிக்கொண்டிருத்தல் வேண்டும். உண்மை இப்படி இருப்பதனால், யார்யாரிடத்திலே நாம் தெய்வத்தன்மையைக் காண்கின்றோமோ அவரவரிடத்திலே, அவரவர் உயர்வு தாழ்வை எண்ணாமல், முதல்வன் நினைவே வரப் பெற்று, அத் தெய்வநிலை யொன்றையே கண்டு தொழுதல் கடமையாகும்; இது வேற்றுமையற்ற வழிபாடு எனப்படும். இதனால், இறையுறவு மேன்மேலும் மிகும். அதனால், அருளுணர்வு பெருகி யெழும்; அது, நாம் எல்லா நலங்களும் ஒருங்குபெறக் காரணமாகும்.

'விரோதி' யாண்டும், அதனை வெற்றியுடன் கடக்கும் நன் முயற்சியாக ஆண்டுப் பிறப்பன்று முன்வந்து ஒலிக்கும் 'அமிர்தவசனி'யும் திருவருளால் மன்பதைக்கு இவ் வுணர்வு பெருக்கி உதவுக!

அமிர்தம்

(திருமுருக கிருபானந்தவாரி)

மக்கள் பல்வேறு கருத்துடையவர்களாக இருக்கின்றனர். ஒருவர் கருத்துப்போல் ஒருவர் கருத்து ஒரு போதும் அமைவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் அந்தக் கரணங்கள் வேறு. அதனால், அறிவும், எண்ணமும், நடையும் வேறுபடுகின்றன. குணங்களும் மாறுபடுகின்றன.

7. கடனுன தபய மடிமைய்யு னடிமை

ஒருவன் இசையை விரும்புவான். ஒருவன் இசையை விரும்பாது உணவை விரும்புவான். ஒருவன் வேதாந்தத்தைப் படிப்பான். ஒருவன் சித்தாந்தத்தை உணர்வான். ஒருவனுக்கு அன்னதானத்தில் அதிக அன்பு. ஒருவனுக்கு கல்விதானத்தில் அதிகப்பற்று. ஒருவன் பழநி வேலவரைச் சிறப்பாக நினைப்பான். ஒருவன் தணிகை ஆண்டவரைப் பெரிதாக நினைப்பான். இப்படியே எடுத்ததற்கெல்லாம் கருத்து வேற்றுமை. ஆனால், ஒரே ஒரு எண்ணத்தில் மட்டும் கருத்து வேற்றுமை ஒருபோதும் கிடையாது. முன்னும் இருந்ததில்லை; இப்போதுமில்லை; இனியும் இருக்கப் போவதில்லை. அன்றும் இன்றும் என்றும் எல்லோரும் ஒன்றுபோல் ஒத்திருக்கின்றனர். அது எது?

"சாகாமல் இருக்கவேண்டும்" என்ற எண்ணத்தில் யாருக்குக் கருத்து வேற்றுமை? எல்லோரும் நெடுநாள் வாழவேண்டும் என்றுதான் விரும்புகின்றார்கள். மனிதர்கள்மட்டுமன்று; பறவையும், விலங்கும், ஏனைய உயிர்களும் அங்ஙனமே விரும்புகின்றன.

"சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞா னொபதேசிகனே"

என்பர் நமது அருணகிரி நாதர்.

தேவரும் முனிவரும் முன்னொரு சமயம் சாகாமலிருக்க என்னவழி என்று ஆராய்ந்தனர். பாற்கடல் கடைந்து அமிர்தத்தை எடுத்து உண்டனர். அமிர்தம் மரணத்தை நீக்குகின்றது. அந்த அமிர்தம்போன்ற சொற்களும் மரணத்தை நீக்கும்.

எலும்பைப் பெண்ணாக்கியதும், அரவம் தீண்டிய மகனை உயிர்ப்பித்ததும், முதலை வாய்ப்பட்ட மதலையை வருவித்ததும் அமிர்த வசனங்களேயாம்.

கடுகியு னடிகள் தருவாயே (திருப்புகழ்)

அமிர்த வசனம் நமது மரணத்தை நீக்கும், தாபத்தைப் போக்கும், இன்பத்தைப் பெருக்கும், உள்ளத்தை யுருக்கும், உயிர்க்கு உறுதிசெய்யும்.

அமிர்தகவித் தொடை பாட
அருள தெனக் கருள்வாயே''

என்றனர் அருணையடிகள்.

ஆதலின் அமிர்த வசனத்தை யாரே விரும்பாதார்?

பத்து சுவாமிகள் சேர்ந்தாலும் ஒருமுத்து சுவாமிக்கு நிகரில்லை என்பது பழமொழி. எனது உழுவலன்பர் உயர்திரு முத்துசாமி ஐயர் அவர்கள் அமிர்த வசனி என்னும் தமிழ் வெளியீட்டை நியதியாக வெளியிடத் தொடங்கியிருப்பது தமிழகத்தின் தவப்பயனே.

தஞ்சத்தருள் சண்முகனுக்குகந்த செஞ்சொற்களும், நீதிநெறிகளும், அருளுரைகளும் இதில் வெளிவந்து, அதர்மமாகிய கோடையால் வாடிவதங்கிய உயிர்களாகிய பயிர்களை வானுறுபோன்ற தமிழ்த் தேனுறு பாய்ச்சி வளர்க்குமாக! அமிர்தவசனி நீடு வாழ்க!

பழம் பழனி

(கி. வா. ஜகந்நாதன்)

கலியுக வரதனாகிய முருகவேள் இன்றும் அடியார்களிடத்தில் தன் அதிசய அற்புதத் திருவருளைக்காட்டி ஆட்கொள்ளும் நிகழ்ச்சிகள் பல உண்டு. அப்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்களில் பல அற்புத நிகழ்ச்சிகளைக் காணலாம். பழனித் தலத்தில் அடிக்கடி இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு,

பழனியில் மலைமேல் தண்டாயுதபாணியின் திருக்கோயிலும், ஊருக்குள் தேவியருடன் உள்ள குமரன் ஆலயமும் இருக்கின்றன. மலையைப் பழனி யென்றும், ஊரிலுள்ள திருக்கோயிலை ஆவினன்குடியென்றும் வழங்குகின்றனர். இத்தலத்தில் வையாபுரி என்ற பெரிய தீர்த்தம் ஒன்று இருக்கிறது.

---

8. தீப விளக்கங் காண எனக்குன்

பழனியென்பது பழம் நீ என்பதன் திரிபென்று பழனித்தல புராணம் கூறுகிறது. நாரதர் கொடுத்த பழத்தைத் தனக்குச் சிவபெருமான் வழங்காமையால் சினங்கொண்ட செவ்வேள் இம் மலையில் வந்து நின்றான்; சிவபிரானும் தேவியும் இங்கே எழுந்தருளி, "பழம் நீ ஆக இருக்கையில் உனக்கு வேறு பழம் எதற்கு?" என்று கூறி அன்பு பாராட்டினர்; அவர்கள் கூறிய, "பழம் நீ" என்ற தொடரே இதற்குப் பெயராகிப் பின்பு அது குறுகிப் பழனி என்று ஆயிற்று. இது பழனித் தலப்புராணக் கதை.

திருவாகிய லக்ஷ்மியும் ஆவாகிய காமதேனுவும் இனனாகிய சூரியனும் பூசித்தமையால் திருவாவினன் குடி என்ற பெயர் வந்ததாகப் புராணம் கூறுகிறது.

பழனிக்குச் சித்தன். வாழ்வு என்று ஒரு பெயர் உண்டென்று, திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால் தெரியவருகிறது. சித்தன் என்பது முருகக் கடவுளுடைய பெயர்களுள் ஒன்று, "சித்தன் வாழ்வு, இல்லந் தொறுமூன்றெரியுடைத்து" என்று, ஔவையார் பாடிய பாட்டொன்றில் வருகிறது. அதனால் அங்கே அந்தணர் அதிகமாக முற்காலத்தில் இருந்தனரென்று தெரியவருகின்றது. இவை புராண வாயிலாகவும் பிறவாறும் பிற்காலத்தில் வழங்கிவரும் செய்திகள்.

* * *

தமிழில் உள்ள பழைய நூல்களால் இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பும் முருகனுடைய வழிபாடு மிகச்சிறப்பான நிலையில் தமிழ் நாட்டில் நிகழ்ந்து வந்தது என்று தெரிந்து கொள்ளலாம். நக்கீரர் தாம் பாடிய திருமுருகாற்றுப் படையில், முருகன எழுந்தருளியிருக்கும் இடங்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறார். அவர் கூறிய தலங்களே ஆறுபடை வீடுகள் என்று பிற்காலத்தில் வரையறையாக வழங்கலாயின. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை மலை என்று அந்த ஆறுபடை வீடுகளையும் பெயரிட்டு வழங்குவர். இவற்றில் மூன்றாவதாக வருவது ஆவினன்குடி.

(தொடரும்)

சீதள பத்மந் தருவாயே (திருப்புகழ்)

பெருந் திருடன்

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.

திருடுதல் என்பது ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்று என்பர். ஆனால் அது பாதகமா, இல்லையா என்பதுகூடத் திருடியவரையும் திருடப்பட்ட பொருளையும் பொறுத்துள்ளது. தண்டநூல் (Penal Code) கூட ஒருகுற்றவாளியைத் தண்டிக்குமுன் அவன் அக்குற்றஞ்செய்ய நேர்ந்த காரணங்களையும் கருத்தையும் ஆராய்ந்து அதற்குத் தக தண்டனை விதிக்கிறது.

பள்ளி மாணவன் எழுதுகோல் திருடுவதிலிருந்து டிராம், பஸ், ரயில் முதலிய வாகனங்களில் செல்லும்போதும், பெரிய பாங்கு, தனவந்தர் வீடு முதலியவற்றிலும் திருடுவதுவரையில் திருட்டு பலவகையாகக் காட்சி அளிக்கிறது. ஆனால் இவற்றின் அடிப்படையான நோக்கம் பிறரை வஞ்சிப்பதும், பிறருடைமைகளைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும் என்ற மோசமான எண்ணமுமே ஆகும். ஆதலின் இவைகள் தண்டனைக் குரியனவாகக் கருதப்படுகின்றன.

திருடுதலின் நோக்கம் மேன்மையானதாயின் அதுவும் சிறந்ததாகக் கருதப்பட்டது. இக் கருத்துப்பற்றியே நமது சைவ சமய குரவர்களும் ஆழ்வார்களும் இறைவனையே கள்வனாகக் கூறி மகிழ்ந்தனர்.

அவர்கள் கூறும் திருடர் வரிசையைத் தொகுத்து, அதில் பெருந்திருடன் யார் என்று ஆராய்வோம். சலந்தரன் என்ற அசுரன் மடியுமாறு சிவபிரான் மறைமுனி வேடங்கொண்டு சென்று தம் காலால் தரையில் ஒரு சக்கிரவடிவமான கோடிழுத்து அதைப் பேர்த்தெடுத்து தலைக்குமேல் எடுக்குமாறு சலந்தரனைப் பணித்தார். அவன் தனக்குச் சமமான பலசாலிகள் இல்லை என்ற தருக்கினால் அங்ஙனமே செய்தான். அது சக்கரமாகமாறி அவன் தலையை அறுத்து வீழ்த்தியது. இதனைக்கண்ட திருமால் அச் சக்கரத்தைத் தமதாகக்கொள்ள எண்ணிச் சிவபிரானை ஆயிரந் தாமரைகளால் அருச்சிக்கலாயினர். அப்போது செந்தாமரைக் கண்ணரின் சிவபூசை மகிமையை உலகுக் கறிவிக்க விரும்பிய சிவபிரான் ஆயிரந் தாமரையில் ஒரு பூவைத் திருடினர். ஒரு மலர் குறைந்ததை

9. அடியனிந வினைநீறு படஅமா ரிதுபூசை

உணர்ந்த திருமாலும் 'கண்ணொன்று இடந்து மறைச்சிலம்பார்த்து மலரடிக்கு' அணிந்தனர். சிவனாரும் மகிழ்ந்து மாலுக்குச் சக்கரத்தை மாண்புடனீந்தனர். அன்றுமுதல் சிவனார் 'பூந்திருடக்' ஆனார்.

தில்லையில் வாழ்ந்த திருநீலகண்ட நாயனார் வீட்டில் திருவோடு திருடி மறைத்ததும், புகார் நகரத்து அமர் நீதியார் வீட்டில் கோவணந் திருடியதும் திருத்தொண்டர் புராணம் செப்புகிறது.

பாட்டிற்கு இரங்கும் சோமசுந்திரா பாணபத்திரற்காக வரகுணபாண்டிய மன்னன் மாளிகையிலிருந்து பொன்னும் மணியும் திருடிக்கொணர்ந்த செய்தி திருவிளையாடற் புராணம் தெரிவிக்கிறது. இதனால்தான ஆளுடைய பிள்ளையாராம் திருஞான சம்பந்தருக்குப் பொற்றாளம், முத்துச் சிவிகை, குடைவிருது முதலியன கொடுத்த செய்தியைப் படித்த புலவர் ஒருவர் 'ஊர்தொறும் பலிகொண்டுய்க்கும் ஒருவனுக்கு' இவைகள் எங்ஙனம் கிடைத்தன? என்று ஐயுறுகின்றார். மலரும் மணியும் திருடியதுபோல் மனத்தையும் திருடியதால் 'உள்ளங்கவர் கள்வன்' என்பர் புகலியர் பெருமான். கச்சிப் பதியில் பாடிய திருப்பாட்டில் 'கள்ளக் கம்பன்' என்பர் சுந்தரமூர்த்திகள்.

இனி மற்றொரு கள்ளனைக் காண்போம். இவனது கள்ளத் தன்மை இளங் குழவிப் பருவத்திலேயே தொடங்கியது. ஓடியாடி நடக்கத் தொடங்கியதும் இவனது திருட்டுக் குணம் உச்சநிலையை அடைந்தது. இக கள்வனுக்குப் பாலுந் தயிரும் வெண்ணெயுந் தான் மிகப் பிரியம். எந்த வீட்டில் எவ்வளவு உயரத்தில் வைக்கப் பட்டிருந்தாலும் இக்கள்ளன் அங்குத் தோன்றி தாழியை உடைத்து வெண்ணெயையுண்டு வெளியேறுவான். பாலைக் கறந்து ஒரு இடைச்சி கொண்டுவந்து அடுப்பிலேற்றி அதனைக் காய்ச்ச நெருப்புக்காக அடுத்த வீட்டிற்குச் சென்றிருந்தாள். இச்சமயம் நோக்கிக் கண்ணன் வீட்டினுள் புகுந்து உறியிலிருந்து வெண்ணெய் முழுதையும் கொள்ளைகொண்டான். இப்படிப் பலமுறை செய்து மத்தடியுண்ட மாயனின் லீலைகள் அனேகம். இவனது கள்ளச் செயல்களைப் பலர் வந்து கூறக்கேட்ட யசோதை, கண்ணனை மணிக் கயிற்றால் உரலோடு பிணித்தாள். அன்றுமுதல் கண்ணன் தாமோதரன் (தாமம்—கயிறு, உதரம்—வயிறு—கயிறுகட்டிய வயிறன்) என்ற பெயர் ஏற்றான். இவனை நமது அருணகிரியார் 'நவநீதமுந் திருடி உரலோடே ஒன்றும் அரி' என்பர்.

அதிசயமே எருள்பாட வரவேணும் (திருப்புகழ்)

இவனது கள்ளத்தன்மை இவனது வயதேற ஏற அதிகரித்தது. நீராடிக்கொண்டிருந்த கோபியர் புடவைகளைத் திருடிச்சென்ற செய்தியையும் யாவரும் அறிவர். பழங்காலத்தில் எந்நாட்டவர்க்கும் இறைவனைத் தந்தைபோலத் தென்னாடு கள்ளனையும் உதவியது போலும். 'தெற்கத்திக் கள்ளனடா' என்ற பாட்டும் நினைவிற்கு வருகிறது. சோலைமலை என்ற அழகர் கோவில் (மதுரைக் கருகில் உள்ளதலம்) தெய்வம் 'கள்ளழகர்' என்றே அழைக்கப்படுதல் குறிக் கத்தக்கது.

பிள்ளையாரின்றி எக்காரியமும் தொடங்கலாகாது. ஆதலின் மூத்த பிள்ளையாரும் இக் கள்ளர் கூட்டத்தில் கலந்துகொண்டார். குருடும் நொண்டியுமான இரட்டைப் புலவர்கள் தாம் பரிசிலாகப் பெற்ற பொன்மூட்டை ஒன்றைக் குளக்கரையிலிருந்த பிள்ளையார் காவலாக அவரருகில் வைத்துவிட்டுக் குளிக்கப் போயினர். குளித்து வந்துப் பார்க்க மூட்டையின் முடிச்சவிழ்ந்திருந்தது. பொற்காசுகள் எவையும் காணப்படவில்லை. இதற்குப் பிள்ளையாரே காரணம் என அந்தப் புலவர்கள்,

"தம்பியோ பெண்திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—அம்புவியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்தீர், போமோ?
கோத்திரத்திற்குள்ள குணம்"

என்று பாடினர். கணபதியும் மகிழ்ந்து அம்மூட்டை முன்னிலும் பெரிதாகும்படி பொன் காசுகளை அளித்தனர்.

'மேலே சொன்ன கள்வர்களெல்லாம் களவாடியவை பூவும், வெண்ணெயும் பொன்னுமாகும்,' இதைவிடப்பெரிதாம் ஒன்றைத் திருடிய ஒருவனைத்தான் 'பெருந்திருடன்' என்போம்.

இக்கள்வன் யார்? இவனே 'செம்மான் மகளைத் திருடுந் திருடன்' தினைப்புனங்கிளி காத்த சவுந்தரியான வள்ளிநாயகி, வீட்டிலுறங்கும் வேளை; நடுநிசி. வள்ளி பிராட்டியின் தாய் உறங்கினள். வேடர்களின் நாய் உறங்கியது. பேயும் உறங்கும் பெரு நிசியில் வள்ளி உறங்கும் இடத்திற்குப்பின்னால் உள்ள தோட்டம், மாமரந்தழைத்தோங்கி, பிஞ்சுகள் எடுத்துள்ளது. சிறுபள்ளங்களில் மழைநீர் தேங்கியிருக்கிறது. வேடர் அறியாமல் வள்ளியைக் கொண்டுபோக எண்ணிய குமரவேள் மாம்பிஞ்சு ஒன்றைப் பறித்

10. வாராய் மனக்கவலை தீராய் நினைத்தொழுது

துக்குட்டையில் எறிகிறான். கந்தன் வரவைக் கனிவுடன் நோக்கிக் காத்திருந்தவள்ளி எழுகிறாள். மெல்ல அடிமேல் அடிவைத்து அண்ணலை வரவேற்க வாசலை அடைகிறாள். பாழுங்கதவு தாளிட்டு அடைத்திருக்கிறது! தாழ்ப்பாள் திறந்தால் வீட்டிலுள்ளோர் எழுந்துவிடுவரே! ஒன்றுந் தோன்றாமல் துடிக்கிறாள். வேறு வாயில் களில்லை. புறக்கடை வாயிலும் பூட்டிக்கிடக்கிறது. வீட்டின் சுவரின்புறத்தில் கந்த குகேசன், சுவரின் உட்புறத்தில் வள்ளி நாயகி.

கதவு திறக்குமென்று காத்திருந்த குகன் நெடுநேரமாகியும் கதவு திறக்காமையால் சுவரில் கன்னம் வைக்கலாயினான். கன்னக்கோலால் சுவரில் மெள்ள மெள்ளக் 'கர கர' என்ற ஒலிகேட்கிறது. அவ்வொலியைப் பின்பற்றி வள்ளி அங்குவந்து நிற்கிறாள்; சுவருந் தொளைப்பட்டது. குகன முகமும் தெரிந்தது. உள்ளே புகுந்தான் வள்ளற்குமரன்; வள்ளியைத் தூக்கித் தோளில் வைத்து வெளியே வந்து பெண் திருடிய பெருந்திருடனானான்.

"சேணொணாயிடை இதண்மேல் அரிவையை
சோரநாடிய திருடா"

"தன்னல் மொழி பின்னளகத்
தன்ன நடைப் பன்ன உடை
கண்ணவிரீச் சுறவிட்டு—கெண்டையானைக்
கன்னமிடப் பின் இரவில்
துன்னு புரைக் கன்முழையில்
கன்னிலையில் புகாவேர்த்து—நின்றவாழ்வே."

"உரத்தோளிடத்தில் குறத்தேனை வைத்திட்டு
ஒளித்தோடும் வெற்றிக்—குமரேசா."

என்ற அருணகிரிநாத சுவாமிகளது வாக்குகளை நோக்குக.

எனவே, பூவைத்திருடிய புராரியையும், வெண்ணெய் திருடிய கண்ணனையும், பொன் முடிச்சவிழ்த்த மூத்தபிள்ளையையும் விடப் பெண்ணைத் திருடிய அண்ணலாகிய செவ்வேல் முருகனே பெருந் திருடன் என்பதில் ஐயமுண்டோ?

வாரேன் எனக்கெதிர்முன் வரவேணும் (திருப்புகழ்)

"அப் பெருந்திருடன் எனது ஆன்மபோதத்தைத் திருட அறியானோ?" என்று ஆர்வமுடன் கேட்கும் பாம்பன் குமரகுருதாசரது பாட்டினைப் படித்துப் பாருங்கள்.

"கோத்தயிர்வெண் ணெய்த்திருடன் கோலமரு கா நறிய
பூத்திருடன் தன் மதலாய்! பொங்குநறக்—கோத்திரத்தோர்
பெண்திருடிச் சென்ற பெருந்திருடா! என்போதம்
உண்டுதிரு டத் தெரியா யோ?

இல்லாத பரம்பொருள்

(அ. சீநிவாசராகவன்)

'முருகன் இப்போது எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை' என்றார் நண்பர். அவர் குறிப்பிட்டது முருகதாஸ் என்ற பக்தரை. பாடும் பணியே பணியாய், அன்பர்கள் கூடும் இடமெல்லாம் சென்று, மனமுருகப்பாடி ஆனந்திக்கும் அந்த பக்தரை, அன்பர்கள் 'முருகன்' என்ற பெயரால் அழைப்பது வழக்கம்.

'தெரியவில்லையா?' என்றேன்
'இல்லை, இப்போது இங்கே இல்லை' என்றார்.
'இல்லையா? முருகன் இல்லாத இடம் ஏது? என்றேன்.

நண்பர் சிறிது தயங்கினார், பிறகு சிரித்துக்கொண்டு 'ஓகோ, நீங்கள் அந்த முருகனைப் பற்றிப் பேசுகிறீர்களா? அவன் எங்குந்தான் இருக்கிறான். ஆனால் நம் குருட்டுக் கண்களுக்கு மட்டும் தெரியவில்லை.'

சிரித்துக்கொண்டு பேசத்தொடங்கிய அவருடைய குரல் இப்போது தழதழத்தது. நாங்கள் இருவரும் சிறிதுநேரம் மௌனத்தில் ஆழ்ந்தோம். என் சிந்தனை, மெல்ல ஊர்ந்து, தெளிவற்ற கருத்துக்களைப் பிடித்துக்கொண்டு தவழ ஆரம்பித்தது.

'உண்மைதானே! குருடனுக்குக் கண் எப்படித் தெரியும்? அது மாத்திரம் அல்ல. அந்த முருகனுந்தான் திட்டமாக இப்படி என்று சொல்லக் கூடிய வகையில், இங்கே என்று சுட்டிக் காட்டக் கூடிய ஓரிடத்தில் இருந்தால் நாமும் பார்ப்பதற்கு முனையலாம், அவனோ பரம்பொருள்,

---

11. அறியஅறிய அறியாத அடிகள் அறியஅடியேனும்

"உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்ற அதுவே"

உருவமும் இல்லை, அருவமும் இல்லை, உள்ளதும் இல்லை இல்லதுமில்லை. உள்ளதும் இல்லையா? இது என்ன கூத்து? முருகன் என்ற பொருள் இல்லவே இல்லையா? நம்முடைய பிரமைதானு ஆறுமுகத்தையும் ஆறிரு தடந்தோளையும் வேலையும் அவன் கடைக் கண் இயலையும் சிருஷ்டி செய்தது? சிருஷ்டி கர்த்தா என்று நாம் வணங்கிவரும் அவனை சிருஷ்டி செய்தது நமது பேதைமையா? இது என்ன வேடிக்கை!'

என் சிந்தையில் பரபரப்புத் தோன்றியது. 'உளதன்று, இலதன்று' என்ருல், 'முருகனே இல்லை, பரம்பொருள் என்று ஒன்றும் கிடையாது' என்ரு அதற்குப் பொருள் காணுவது? என்னுடைய மயக்கத்திற்கு மருந்தாக நம்மாழ்வாருடைய சொற்கள் என் நினைவில் எழுந்தன. அவர் சொன்னுர்.

"உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே" ஆம். இருக்கிருன். அவன் ஒழிவிலன். அவன் இல்லாத இடம் இல்லை. எங்கும் பரந்து பார்க்குமிடமெல்லாம், அதற்கப்பாலும், நீக்கமற நிறைந்து நிற்கின்ருன்.

நல்லது. இருதகைமையொடு உளன் என்ருரே அது என்ன விஷயம்? அவ்விரண்டு குணங்கள் யாவை? நம்மாழ்வார் பேசினுர்.

"உளன் என இலன்என இவை குணமுடைமையின்
உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே"

'உளன்' என்ற ஒரு தன்மை, 'இலன்'என ஒரு தன்மை. 'உளன்', உள்ளவன்தான், ஆனுல 'இலன' 'இலன்'தான், ஆனுல் 'உளன்', 'ஒழிவிலன்'.

என் சிந்தையில் பழைய மயக்கம் தலை காட்டியது. நம்மாழ்வார் தொடர்ந்து பேசினுர்.

"இறைவன் எங்கே இருக்கிருன் என்றல்லவா நீ கவலைப் படுகிருய்? இதோ, இங்கேயே, நாம் வாழ்கின்ற இந்தப் பிரபஞ்சத் திறகுள்ளேயே, ஒவ்வொரு பொருளிலும், அதன் வடிவாய், குணமாய், அதன் சக்தியாய், அணுவினுக் கணுவாய், நிற்கிருன்.

இந்த நிலையில் அவனை நீ காணமுற்பட்டால் அவன் 'உளன்', இந்தப் பிரபஞ்சத்திற்குள்ளேயே உள்ளவன், அவன் உருவமே நீ காணும் பொருள் எல்லாம்:

'உளன் எனில் உளன் அவன் உருவமிவ் வுருவுகள்.' ஆம், வானம், மண், தீ, காற்று, புனல், மான், மரம், மனிதன, நீ எழுதுகிறாயே அந்த எழுதுகோல், எழுதும் எழுத்து, இவை யெல்லாம் அவனுடைய உடம்பு. அதன் உயிராய் அவன் இருக்கிறான், அவன் 'உளன்', இங்கேயே 'உளன்'.

எனக்கு நம்பிக்கை பிறந்தது. உடனே சந்தேகமும் கூடவே பிறந்தது, ஆமாம், இந்தப் பிரபஞ்சத்திற்குள்ளேயே இருக்கிறான் என்று சொல்லிவிட்டால் போதுமா? அப்படியானால் இந்தப் பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தா என்றும், பரம்பொருள்—எல்லாவற்றையும் கடந்த பொருள் — என்றும் அவனை எப்படிச் சொல்லுவது? பிரபஞ்சமே அவன் உடல், இதற்குள்ளே அவன் அடங்கி இருக்கிறான என்று பேசுவது அவனுடைய அகண்டாகாரத்தை மறந்து, அதை இந்தப் பிரபஞ்சச் சிமிழில் 'அடைப்பதாகாதா?

இப்படியெல்லாம் சென்றது என் சிந்தனை. இது எப்படியோ நம்மாழ்வாருக்குத் தெரிந்து விட்டது. அவர் பேசலானார்:

"நீ நினைப்பது சரிதான். இப்பாலைக் கடந்து நின்றால்தானே காரண கர்த்தாவாக இருக்க முடியும்? இந்த எண்ணத்தோடு பார்த்தால் அவன் இங்கே இல்லை, அங்கே, அதாவது விசுவவெளிக்கு அப்பால் இருக்கிறான் என்று கருதத் தோன்றும். அதுவும் சரிதான், "உளன் அலன் எனில் அவன் அருவ மிவ்வுருவுகள்". பிரபஞ்ச வரம்புக்குள்ளே இல்லை என்று நீ நினைத்தால் இல்லைதான், ஆனால் ஒன்று, அப்போது இங்கே நாம் பார்க்கின்ற பொருள்கள் யாவும் அவன் ஆதிகாரணனாக அங்கே இருக்கின்றான் என்பதைக் காட்டும் அறிகுறிகள். அவனுடைய உருவமற்ற தன்மையைக் காட்டும் உருவங்களே இவை. இந்தப் பிரபஞ்சம்—உருவும், குணமும் படைத்த இது—குணங்கடந்த அவனைச் சுட்டிக் காட்டும் சாதனம்". தெளிவு அரும்பியது. நம்மாழ்வார் தொடர்ந்து பேசினார்.

'உளன் அலன்', 'உளதன்று' என்று சொன்னவுடன் 'இல்லவே இல்லை' என்று நினைத்தாய். அதனால்தான் தடுமாற்றம் ஏற்பட்டது.

---

12. ஒருகால் முருகா பரம குமரா

'உளன்' என்ற நிலையிலும், 'இலன்' என்ற நிலையிலும் ஒன்று உறுதி. அவன் 'உளன்', 'ஒழிவிலன்', இதை மறந்துவிடாதே. இங்கேயே, உன்னைச் சுற்றியுள்ள பொருள்களைக் கொண்டே அவனைத் தொட்டு விடலாம், கவலைப்படாதே."

அவருடைய குரல் மறைந்தது. பாட்டு மட்டும் சிந்தையில் நின்றது:

"உளன் எனில் உளன் அவன் உருவ மிவ் வுருவுகள்
உளன் அலன் எனில் அவன் அருவ மிவ் வுருவுகள்
உளன் என இலன் என இவை குண முடைமையின்
உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே"

இந்தப் பாடலின் நினைவே 'அமிருத வசனிக்கு' என் முதல் காணிக்கை.

பக்தியும் இசையும்

ஸ்ரீ த்யாகராஜ தெய்வீக இசைப்பொருள் விளக்கம்

[சீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை]

உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே.

என்று வருந்தி உரைத்தார் தாயுமானார். அதுபோல், நமது த்யாகப்ரும்மம், 'ப்ரணவ நாத ஸுதாரஸம் பிலனு ராக்ருதி ஆயே' என்று இசையை எதற்குப் பயன் படுத்தவேண்டும் என்பதைப் பற்றித் தனது அரிய உபதேசத்தை மக்களுலகத்திற்கு அருளியுள்ளார். அதைப் பின்பற்றியே இவ்வமிர்தவசனியில் எனக்குத் தெரிந்தவரை த்யாகப்ரும்மத்தின் அருள் துணைகொண்டு, பக்தியும், இசையும் என்னும் தெய்வீக உண்மையை விளக்க உத்தேசித்துள்ளேன். மக்கள் உலகத்தினர் பருகுவதற்குத்தக்கவாறு உதவிக் கொண்டு வருவேன்.

உயிர்கா வேனவோ தருள்தாராய் (திருப்புகழ்)

இராகம்—சௌராஷ்டரம். தாளம்—ஆதி.

பல்லவி

ஸ்ரீ கணபதினி ஸேவிம்ப ராரே
ச்ரித மானவு லார ஸ்ரீ

அனுபல்லவி

வாகாதிபதி ஸுபூஜல சேகொனி
பாக நடிம்புசு வெடலின ஸ்ரீ

சரணம்

பனஸ நாரிகேளாதி ஜம்பூ பலமூல நாஸிம்சி
கனதரம்புகனு மஹிபை பதமுலு கல்லு கல்லன நும்சி
அனேயமுஹரி சரணயுகமுலனு ஹ்ருதயாம்புஜமுன நும்சி
வினயமுன்னு த்யாகராஜவினுதுடு விவித கதுல
தித்தளாங்குமனி வெடலின ஸ்ரீ

கருத்துரை

வாக்கிற்கு அதிபதியாய் உள்ள கலைமகளின் கணவனை ப்ருமமாவை உண்மையான பக்தியோடு பூஜித்துக்கொண்டும், எப்பொழுதும் மஹாவிஷ்ணுவின் இரண்டு திருவடிகளையும் மனதிலே ஸ்மரித்துக்கொண்டும், பலா தெங்கு நாவல் ஆகிய கனிகளை உண்டு களிப்புடனும், வேண்டுவார் வேண்டும் கற்பயனையெலாம் அளிக்க வல்ல மூர்த்தியாய் இப்பூமியில் தனது திருவடிகள் இரண்டும் கலீர் கலீர்என ஒலிக்க, தண்ணிய பார்வையோடு த்யாகராஜனால் கொண்டாடப்படுகின்றவனும் ஆகிய கணபதி - தாள இலக்கணமெலாம் தவழ திததளாங்கு என்னும் கதியுடன் புறப்பட்டு வருகின்ற இதயாதி இலக்கணங்களும் அமைந்த ஸகல லக்ஷீமீகரங்களும் உடைய கணபதியைச் - சேவிக்க வாரீர் ஏ ஸ்ரேஷ்டமான மனிதக் கூட்டத்தினர்களே என்று அழைக்கிறார் த்யாகப்ரும்மம்.

பக்திக் கருத்தும், இசை இலக்கண மார்க்க மாண்பும்

தான்கண்ட இன்பம் இவ்வையகம் பெறுக என்னும் கருணை அன்புக் கருத்திற்கு ஒக்க சௌராஷ்டர ராகம், ஒரு உத்தமப் பெரியோன் தான்னென்றும் காணாத ஒரு உன்னத ஆனந்தம் அடைந்த

13. காலமழ வளர்ந்து ஞானவெளி கன்கள்

காலே, அவ்வானந்தம் இம்மனித உலகம் பூராவும் அனுபவிக்க வேண்டுமே என்ற கவலேயோடும், மற்றும் இம் மனித உலகம் வீணே பாழில் அலேந்து மடிகின்றதே என்னும் தாளாமையாம் அன்புடனும், ஏ மனித உலகமே! நீவிர் எதையோ நினைந்துகொண்டு உங்கள் காலத்தையெல்லாம் பாழ்படுத்துகின்றீர்களே என்று வருந்தி, அவ்வருத்த மனப்பான்மை தொனிக்க வருத்தமும் அன்பும் கலந்த 'பாவரஸத்தில் - ஒரு உத்தம தாயானவள் எபபடி தனது குழந்தையை நல்வழிப்படுதத - அன்புமுறையில் தனது பரிவின் ஆசையால் நல்வழிப்படுத்த - பாடுபடுவாளோ அஃதேபோல் அழைத்து, நீங்கள் வீணில் கெட்டு மடியவேண்டாம் என்கின்ற அன்புணர்ச்சி மேலிட்டவராய், அவ்வுணர்ச்சி இலக்கணத்திற்குப் பொருந்தியுள்ள சௌராஷ்ட்ர ராகத்தில் அழைத்து உணர்த்துகிறார். இதைக் குறிக்க இந்த ராகம் ரிஷாதம் நீண்டும், தைவதம் நீண்டு அசைந்து பஞ்சமத்தில் வந்துநின்று ஆறுதலேக் காட்டியும், ரிஷபதில் நின்று நன்கு அசைந்து தான் அழைக்கும் மனப்பண்பின் உணர்ச்சிக்களேத் ததும்ப, தான்கொண்ட கருத்து அழகுற விளங்க இசை இலக்கண மார்க்க இயற்கையோடு எண்ணக் கருத்தும் இசைப் பொருத்தமும் ஒன்ற, இயல் இசை எண்ணக் கருத்துப் பாவ இயற்கையோடு உபதேசித்து, இசையின் பயனே உணர்த்து கிறார் த்யாகப்ரும்மம். இதுவே மக்கள் அறிந்து பயனடைய வேண்டிய இசைக் கருத்தாகும்.

ஆகவே ப்ரணவத்திடையே பிறந்த இசைக்கலே இதற்கென்றே தோன்றியதல்லாமல், மககள் உலகாதாயமான கேவலம் மனிதப் புகழ்ச்சிக்குப் பயன்படுததிககொள்ளுதலேக் கண்டு த்யாகப் ரும்மம் வருந்துகிறார். இசைச கலே இதயாதி காரியங்களுக்குப் பிறந்ததல்ல என்பதும் அவருடைய வருத்தமான அபிப்ராயமும் ஆகும் என்பதோடு மக்கள் இனததிற்கு இவை நன்மை பயப்பனவும் அல்ல என்பதும் ஐயர்வாள் கருத்தாகும்.

(தொடரும்)

காண அருள்என்று பெறுவேனோ (திருப்புகழ்)

மழையே பொழிவாய் !

(அ. மு. பரமசிவானந்தம்)

'மழை இன்றி மாநிலத்தார்க்கில்லை' என்பது என்றைக்கும் பொய்யாமொழி. வளம் பெருக்கி, மககளையும் பிற உயிர்களையும் வாழ்விக்கவல்லது மழையே யாகும். மழை இன்றேல் மாநிலத்துப் பசும்புல்லும் பார்ப்பதரிதாகும். இதோ இன்றைய உலகில் மழை இல்லாநிலையை எண்ணி ஏங்குகின்றோம் நாம். மழை இல்லை எனவே விளைவில்லை. மக்கள் உணவுபெறாது வாடுகின்றார்கள். ஆதலால், 'மழையே பொழிவாய், என்று மக்கள் பலவகையில் வேண்டுகின்றார்கள்.

இந்த வேண்டுகோளை ஆண்டவன் அடியவர்கள் அவ்வப்போது விடுத்திருக்கின்றார்கள். நாட்டில் தீங்ககன்று, செம்மை செழிக்க வேண்டுமானால் நன்மழை பெய்யவேண்டும் என்பதை உணர்ந்திருக்கின்றார்கள். உணர்ந்த நிலையில் உடையவனைப்பாடும் பண்ணார்ந்த பாடல்களில் 'மழை பொழிக' என வாழ்த்துகின்றார்கள். செம்மனச் செல்வியாராகிய ஆண்டாள் தமது மார்கழிப் பாவையில் மழை வேண்டுகின்றார்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்கு பெருஞ் செந்நெல்' விளைக, என்று வாழ்த்துகின்றார்கள். பாவை நோன்பு சிறக்க - பக்திநலன் விளக்க - ஆம் - மழை இன்றி அமையாதது. மழை இன்றேல் மக்கள் வாழ்வுமட்டுமன்றி இறைவனுக்குச் செய்யும் சிறப்பொடு பூசனையும் செல்லாது.

வைணவத்தே பாவைபாடிய பெருமைபெற்ற செல்வியார் ஆண்டாள். சைவத்தே பாவைபாடிப் பரமன் புகழ்விளக்கிய பெருமை மணிவாசகரைச் சார்ந்தது. அவர் பாவையில் 'மழையே பொழிக' எனவாழ்த்துகின்றார். அவர் வாழ்த்தும் முறை சாலச் சிறந்தது. சற்று காண்போம்.

கடல் நீரை முகந்து வெண்மேகம் கருமேகமாகி வானிடை உலவுகின்றது. நீர்த்தேக்கம் பெருகப்பெருக அசைகின்றது. மின்னுகிறது. இடி ஒலி எழுப்புகிறது. வானவில் வளைகிறது. பிறகு மழைபொழிகின்றது. அழுதடி அடைந்த அன்பராம் மாணிக்க வாசகருக்கு இக்காட்சி இறைவியார் காட்சியை, அவர் அன்பர்க்

---

14. தாளிணைகள் உற்று மேவிய பதத்தில்

கருளும் காட்சியை நினைவூட்டுகின்றது. உள்ளத்தே அன்பு ஊற்றுப் பெருக்கெடுக்கின்றது. உணர்ந்து பாடுகிறார். கருமேகம் உமை அம்மையார் தோற்றத்தைக் காட்டுகிறது. மின்னல் அவர் இடையை எண்ணவைக்கிறது. இடி ஒலி அம்மையாரின் சிலம் பொலியைச் சிந்தைக்குக் கொண்டுவருகிறது. வில் புருவத்தை நினைப்பூட்டுகிறது. அனைத்துக்கும் மேலாகப் பொழியும் மழை அம்மையார் அடியவர்க்குப் பொழியும் அருள்மழையைக கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. அந்த நிலையிலே தன்னைமறந்த செல்வர் - மணிவாசகர் வாயாரப் பாடுகிறார். இதோ அவர்தம் இனியவாக்கு :—

'முன்னிக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
  என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
  பொன்னஞ் சிலம்பில் சிலம்பி திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
  தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்குமுன் சுரக்கும் இன்னருளே
  என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்'

இப்பாடல் படிப்பார் உள்ளத்தை உருககும் தன்மை வாய்ந்தது. இப்பாட்டின் பொருள் உணர்ந்து பாடும் உளத்தூய்மை உடையார் இருப்பின் ஏன் மழை பொழியாது ? நாடுசெழிகக நன்மழை பொழிய இன்பப் பாட்டிசைக்க இன்று ஒரு மணிமொழியார் தேவை. மணி மொழியார் இன்றேனும் அவர் அன்றுபாடிய பாடலை இன்று பண்ணொன்ற பாட உளம் தூயார் ஒருவராவது தேவை. மனமுருக வஞ்சமற்ற உள்ளத்தோடு உலகம் உய்ய வேண்டும் என்ற உணர்வோடு இன்று ஒருவராவது இப்பாட்டை இசைப்பார்களாயின் மழை உண்டு, மாநிலமும் உய்யும். ஆனல் யார் பாடுவது ! வாக்கால் பாடலாம். அதுவேண்டா ! உளத்தால் பாடவேண்டும். உணர்வால்பாடவேண்டும். உலகெலாம் உய்ய வேண்டும் என்றுபாடவேண்டும். உள்ளத்தூய்மை உடைய அடியார் பாடவேண்டும். பாடுக ! பயன்தருக ! அத்தகைய உண்மை அடியார் இருப்பின் அவரால் உலகம் உய்க ! உயர்க !

முருகனைக் காணும் முறை

வித்வான் மோ. அ. துரை அரங்கசாமி, B. O. L., M. O. L.

நேரிசை ஆசிரியப்பா

உண்டோ கடவுள்? உண்டே கடவுள்!
யாண்டோ அவன் உளன்? யாண்டும் உளனே!
கண்ணில் படுவனோ? என்பட மாட்டான்?
எங்கே தெரிவன? எங்கும தெரிவனே!
எங்ஙனே அதிசயம்? அதிசயம் இலையே!
காணல் இல்லையே! காணின் காணலாம்!
யாண்டோ? யாண்டோ? யாண்டும்! யாண்டும்!
யாண்டும் இருப்பன எண் இலாப் பொருள்களே!
யாண்டும் இருப்பவன் அவனே! அவையல!
எங்ஙனே மடமை? இல்லை! உண்மை!
மரமும் மனையும் வயலும் மலையும்
விலங்கும் பறவையும் வேறுள பிறவும்
அவனோ? அந்தோ! அழிந்திடும் அவையெலாம்!
வளரும்! தேயும்! வருந்தும்! திருந்தும்!
அவையெலாம் அவனோ? அவையெலாம் அவையே!
அழகே இளமையே அளவில் ஆற்றலே
அழிவிலா இயல்பே அறிவின் நிறைவே
இன்பமே இனிமையே இருள் இலா மையே
கனிவே ஒளியே கடவுள் வடிவம்
ஆம் என முதலில் அறிதல் வேண்டும்!
இவையெலாம் பொருளாய் எழில்மிக காட்டும்
தமிழ்ச்சொல் முருகே அமிழ்தினும் இனியது;
முருகே முருகன்; முருகனே கடவுள்;
யாண்டுளது அழகோ ஆண்டுளன் முருகன்;
மலரிலும் மணமலர் மரத்திலும் மயிலிலும்
பூங்கா வனத்திலும் புதுநீர் ஆற்றிலும்
மாஞ்செறி மலையிலும் மங்கைய ரிடத்திலும்
அமைந்த அழகெலாம் அவனது காட்சியே!
யாண்டுள திளமை ஆண்டுளன் முருகன்!
யாண்டுள தாம்றல் ஆண்டுளன் முருகன்!

யாண்டுள தறிவோ ஆண்டுளன் முருகன்!
முருகன் தோன்றும் முறைமை இதனால்
அறியின், இல்லையே அவனிலா இடமென
உணரலாம்; கண்ணிற்கு ஒளிர்வன் என்பதும
உணரலாம்; அதனால், உண்மைக் காட்சி
எடபொரு ளிடத்தும் எண்ணிக் காண்பதே
முருகனைக் கண்ணால் முழுதும் காண்பதாம்;
கடவுளைக் கண்ணால் கவின்பெறக் காண்பதாம்;
கடவுள் உண்டே! கண்ணிற் படுவன்;
'யாவும் அவனே, அல்லன இலை'என
எண்ணி முருகனை எஃகும் இங்'என
கண்ணிற் கண்டு கவலை ஒழிகவே!

வைஷ்ணவர் செல்வம் (முதற்பை)

வகுத்தான் வகுத்தவகை மாற்றமுடியாதது

V. S. வேங்கடராம சாஸ்திரிகள் (கூனூர்)

மேற்கண்ட தலைப்பினை மனத்தில் பதித்தவர் எத்துன்பங்களையும் பொறுத்துக கொள்ளுவர்; எதனையும் எதிர்பார்க்கமாட்டார்கள்; எதனையும் தியாகம் செய்வர்; நடுநிலைமை கொள்ளுவர்; ஸத்தியத்தில் பிடிப்பு உறுதியாகக்கொண்டிருப்பர், என்பதனை, அவ்வடமதுரைச் சூரசேனராஜன் மகனான வசுதேவர், தேவகன் மகளான தேவகியம்மையாரை மணந்து ஊர்வலம் வருங்காலத்தில் காட்டின வகையை, அறியாதார் நம்மில் இருக்கமாட்டார்.

ஸ்ரீ தேவகி வஸுதேவர் ஊர்வலத்தில் தேர்ப்பாகனாய்நின்ற கம்ஸன் "அடே மூடா, உன் உடன்பிறந்தாளான தேவகியின் எட்டாவது மைந்தன், மிகத் துஷ்டனான உன்னைக் கொல்லப் போகிறான்" என்ற மாயவனது ஆகாயவாணியைக் கேட்டுத் தங்கை என்றும் பாராது, திருமண நகர்வலமே என்றும் தெளியாது மிக்க பயத்தினால் பக்கத்தில் உள்ள தேவகியைக் கொல்லப் பாங்காகக் கத்தியைக் கையிலெடுத்து ஓங்கியபோது அவ்வசுதேவர் "வகுத்தான் வகுத்தவகை மாற்றமுடியாததென" உணர்ந்ததைச் செய்கையில் காணச் செய்தனர்.

மகிழ வரங்களும் அருள்வாயே (திருப்புகழ்)

வகுத்தான் வகுத்தவகை மாற்றமுடியாதது என்பதை அறிய அச்சம் அகலவேண்டும். "பயப்படுத்துபவனுக்குப் பயப்படுவோரிடமிருந்து பயம் உண்டாகியேவிடும்" என்ற உண்மையை உணர்ந்தவனே தைரியசாலியாவான். ஒருவருக்கும் தீங்கு செய்யான், அவன்.

என்ன அஞ்சாமை இருந்தது அவ்வசுதேவருக்கு! அவ் ஆண்மை அன்றோ அனைவராலும் வேண்டிக்கொள்ளத் தக்க அணிகலமாவது.

எனக்கு மைந்தர்கள் பிறக்கும்வரை என் மனைவிதேவகி உயிரோடிருப்பது நிச்சயம். மைந்தர்கள் பிறந்தகாலத்தில் எதுவருமோ அதுவரும். கம்ஸனே செத்தாலோ தீமை எதுவுமில்லை. பிள்ளைகளும் பிறந்து கம்ஸனும் உயிரோடிருந்தாலும், அசரீரிவாக்குப் பலித்தலாகாதோ? பிள்ளைகளைத்தர உறுதிமொழி அளித்தால் இந்த கம்ஸன் கோபம் தணிவான். தைரியமாயிருப்பான். நாம் பிள்ளைகளை வைத்துக்கொண்டு இந்தக் கம்ஸனைப் பயமுறுத்தினால் அல்லவோ நாமும் பயப்படவேண்டும். இப்பொழுது விட்டுப் போனவன் வேறொரு காலத்தில் மீண்டு வந்தால் அது என் பிழை ஆகாது. வகுத்தான் வகுத்த வகையே நடக்கும், என்றெண்ணிப் பிள்ளைகளையும் தியாகஞ் செய்ய அவ்வசுதேவர் நினைத்தார்; செய்தும் விட்டார். என்ன பொறுமை, என்ன வைராக்கியம், என்ன தியாகம், என்ன நடுநிலைமை, என்ன உறுதிமொழி, என்ன தைரியம், என்ன கூரிய அறிவு! வருங்கால புத்தியின் பலம் அளவிடமுடிவதோ. என்ன சமயோசிதமானசெயல்! அறம் செய்யும் ஆண்மை என்னே! இத்தகைய அருங்குணங்களே காந்தியடிகளார் புகழும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் செல்வங்களாகும். குணமென்னுங் குன்றேறி நின்றார், வசுதேவர் போன்ற பாகவத சிரோமணிகள் என்பதை நம் புது நவீனங்களான புராணங்கள் எடுத்துக்காட்ட நாம் அவ்வழி ஒழுகல் நலமன்றோ!

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras 1,

‘ அமிர்தவசனி ’

‘அமிர்தவசனி’ முப்பது வருஷங்களாக வருடத்திற்கு ஓர் முறை ஸ்ரீ சக்திதாசர் நெல்லையப்பர் அவர்களால் வெளியிடப் பட்டுவந்தது. இப்பொழுது இறைவன் திருவருளாலும், பக்த நேயர்களின் ஊக்கத்தாலும் உதவியாலும், தெய்வீக விஷயங்களை மட்டும் கொண்ட மாதப்பத்திரிகையாக வருகிறது. மக்கள்களின் ஆதரவை நாடுவதுடன், பக்தி விஷயமான வியாசங்களையும் தக்க பெரியோர்களிடமிருந்து வேண்டுகிறேன்.

ஆசிரியர்.

அறிவிற்சிறந்த ஆன்ரோர்களே !

கல்வியே மக்கட்குக் கண் என்பதும், கற்றலின் பயன் கடவுளை யடைதலே என்பதும் யாவரும் அறிந்த உண்மைகளே. இந்நோக்கத்துடன் ‘அமிர்தவசனி’ தொண்டாற்றுவதற்கு பேருதவி புரிய இசைந்துள்ள திரு. திருப்புகழ்மணி, ரா. பி. சேதுப்பிள்ளை, தெளவழகனார், கி. வா. ஜகந்நாதன், அ. சீநிவாச ராகவன், கிருபா னந்தவாரி இவர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும், எனது மன மார்ந்த நன்றியும், பணிவான வணக்கமும் உரியனவாகுக.

ஆசிரியர்.

அடியார்கள் ஞாயிறு திருக்கூட்டம், சென்னை

சென்ற முப்பது வாரங்களாக ஞாயிற்றுக்கிழமை தோறும், காலை 8 மணிமுதல் 9½ மணிவரை, சென்னையில் அடியார்கள் திருக் கூட்டம் நடந்து வருகின்றதை அறிவீர்கள். முதலில் ஸ்ரீ கந்த கோட்டப் பெருமான் மெத்தை மண்டபத்தில் நடந்தேறியது; நீண்டுவந்த திருக்கூட்டத்திற்கு இடவசதி போதாமையால், ஆண்டவன் உத்திரவுப்படியே, பிறகு பூக்கடை சென்ன மல்லீஸ் வரர் கோவிலில் நடந்துவருகின்றது. பக்தர்கள் ஆயிரக்கணக்காய்க் கூடவும், ஆண்டவன் அருளை அனுபவிக்கவும் ஒரு நல்ல முகாந்தரம். அமிர்தவசனியில் இத்திருக்கூட்டத்து நிகழ்ச்சிகளும் வெளிவரும். இம்மாதிரி கூட்டங்கள் எங்கும் பரவவேண்டு மென்பது இக்கூட்டத்தார் வேண்டுகோள். எங்கெங்கே இக் கூட்டங்கள் நடந்தாலும், அமிர்தவசனி காரியாலயத்திற்கு தெரிவிக்க வேண்டுகின்றோம். இத்தகைய தொண்டுடன் அமிர்த வசனியும் இத்திருக்கூட்டமும் ஒத்துழைக்கும்.

ஆசிரியர்.

36

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்

குழந்தைகளுக்கு
- ரூ.12 காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை.
- ரூ.18 கர்ஜன் — கோரோஜனை மாத்திரை.
- ரூ.15 பாலக்ஸ் — பேதியாக மாத்திரை.

குடும்ப அவசியங்கள்
- ரூ.99 ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்.
- ரூ.77 காலரெக்ஸ் — அஜீர்ணபேதி காலராவிற்கு.

தின உதவிகள்
- ரூ.55 ஜிஞ்சிப் — அஜீர்ண பித்த சமனி.
- ரூ.78 கூலெக்ஸ் — உஷ்ண, சமன, ஸ்நான தைலம்.
- ரூ.61 நஞ்சன்கூடு பல்பொடி — (பயோரியா) பல் உபாதைகளுக்கு.

சகலவித கூந்தல் செழிப்புக்கு சுலபம்
காஷ்மீர் குஸும்
என்ற மலர் மூலிகையை உங்கள் எண்ணெயுடன் கலந்துகொள்க.

சிறந்த சரும வைத்தியன்
ஸ்ரன்டலக்ஸ் சந்தனக் களிம்பு.
காயம், தீப்புண், சொறி, சிரங்கு, பரு, குணமடைய.

மைசூர் பிரேமலீலா ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர்ஸ்பெஷல், அம்பர்ஸ்பெஷல், ஜவாது.

சோல் ஏஜண்டு:- யுனைடெட் கன்ஸர்ன், 56, பந்தர் தெரு, மதராஸ் 1.
(மதுரை, கோவை, குடந்தை, பம்பாய்.)

"மாலா"
வாசனைகள்
*
அத்தர்கள்
*
வாசனை மெழுகு (கோன்)
*
கைக்குட்டை சென்டு
*
சில்க் பைகள்
(ஆடைகளைச் சாப்பாற்ற பெட்டியில் வைக்க)

("சிவ தாண்டவம்" 14 × 20 பல வர்ணப் படம்.) 1—8—0

(வருட சந்தா ரூ. 1 8 0 அனுப்பவும்) வெளிநாட்டுக்கு ரூ. 2